2. ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து செயற்கைக் கோள் செலுத்த இருப்பதற்கு வாழ்த்துக்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியர்களாகிய நமக்குப் பெருமையளிக்கின்ற நிகழ்ச்சியாகவும், விண்வெளிச் சாதனையில் மேலும் ஒரு புகழ் மிக்க அத்தியாயமாகவும் இந்தியப் பேரரசினுடைய மேன்மைக் குரிய பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் முன்னிலையில் ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து ரோகிணி செயற்கைக் கோளை தாங்கிச் செல்லும் ஏ.எஸ்.எல்.வி. ராக்கெட்டை விண்வெளியில் செலுத்தும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி இன்று காலை நிகழ்கிறது. பெருமைக்குரிய இந்த வேளையில் இச் சாதனையை நிகழ்த்தும் நம் இந்தியப் பேரரசுக்கும், சாதனையின் பின்னணியிலுள்ள நம் நாட்டு விஞ்ஞானிகளுக்கும் தமிழக மக்கள் சார்பில் இந்த அவை தன்னுடைய மகிழ்ச்சியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் ஒரு நாள் பொறுத்திருக்கலாம். இன்றுதான் மாண்புமிகு பிரதமர் அவர்கள் போயிருக்கிறார்கள். அந்த ராக்கெட் ஏற வேண்டும் (சிரிப்பு). அந்த நிகழ்ச்சியைப் பாராட்டலாம். பிரதமர் வந்ததைப் பாராட்டலாம். முயற்சி எடுத்ததை எல்லாம் பாராட்டுவோம். சாதனை முழுவதும் வெற்றிகரமாக ஆக வேண்டுமென்று நாம் வாழ்த்தவும் கடமைப் பட்டிருக்கிறோம். அந்தவகையில் இந்த அவையின் சார்பாக பாராட்டுக்கள் தெரிவிப்பதிலே எந்தத் தவறும் இல்லை. ஆனால் இந்த நிகழ்ச்சி எல்லாம் முடிந்து செய்தித் தாள்களில் எல்லாம் முழு விவரம் வந்து, வானொலியிலும், தொலைக்காட்சியிலும் வந்திருக்குமானால், முழு முயற்சியோடு அதற்கான காரண கர்த்தாக்களாக யார் யார் இருந்தார்கள், அறிவியல் அறிஞர்கள், விற்பன்னர்கள் என்று எல்லாவற்றையும் தெரிந்து சொல்லி யிருப்போமானால் மிக நன்றாக இருக்கும். எப்போதும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் முந்திக் கொள்வார்கள். இதில் முந்திக்கொண்டு இருக்க வேண்டியதில்லை (சிரிப்பு). ஒரு நாள் பொறுத்திருக்கலாம். இதுவரையிலும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளைக்கு முழுமையாக நம்முடைய வாழ்த்துக்களை வைத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதுவரையில் நிகழ்ந்த சாதனைகளுக்கு நம்முடைய வாழ்த்துக்கள் உரியனவாகுக.

3. தகவல் கோரல்.

பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு வினாத்தாள் வெளியானது குறித்து.

திரு. எஸ். பி. மணவாளன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினமணி நாளிதழிலே எஸ்.எஸ்.எல்.சி. ஆங்கில கேள்வித்தாள் அவுட் என்று ஒரு செய்தி வெளியாகியிருக்கிறது. 10 ஆம் வகுப்பு ஆங்கிலம் இரண்டாவது தாள் தேர்வுக்கான வினாத் தாள்கள் விடையுடன் காஞ்சிபுரம், மதுராந்தகம், செங்கல்பட்டு போன்ற இடங்களில் ஞாயிற்றுக்கிழமை முதலே தாராளமாக விற்பனைக்கு வந்துள்ளது. சுருங்கச் சொன்னால் இந்த வினாத் தாள் அவுட்டாகிவிட்டது என்று பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. இந்த அடிப்படையில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'செய்தி அவுட்', இத்துடன் விடுங்கள். முழுமையாக இங்கே சொல்ல வேண்டாம். கல்வி அமைச்சரும் வரவில்லை. பொது நலன் கருதி எழுப்பி விட்டீர்கள். இத்துடன் விடுங்கள் (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் செய்தி வந்திருக்கிறது. அதுபற்றி முழுமையையும் ஆராய்ந்து நிலைமையை அறிவிக்கின்ற தன்மை ஏற்படுகின்றவரையில் அதுபற்றி எதுவும் கூறுவதற்கில்லை. மேலும் இதுபற்றிய முழுமையான விவரமும் என்னிடத்தில் இல்லை. அதை கல்வித் துறைதான் ஆராய வேண்டும். மேலும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இந்த நிலையில் முழு விவரத்தையும் சொல்லும் நிலையில் இருப்பார்களா என்று சொல்லுவதற்கில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தப் பிரச்சினையை எழுப்பியிருப்பதன்